தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-6-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இமயம் வேளாண்மைக் கல்லூரியுடன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தரமான கல்விக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்



நாட்டின் வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கு வேளாண் பட்டதாரிகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு சுயநிதி வேளாண்மைக் கல்லூரிகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் தொடங்குவதற்கு அனுமதி பெற்றுள்ளது. அதனடிப்படையில் திருச்சியிலும், துறையூரிலுமுள்ள இமயம் கல்வி அறக்கட்டளை, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியை 2013-2014 ஆரம்பித்து நடத்தி வருகிறது.

சுயநிதி வேளாண்மைக் கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை பெருக்கி அதன் தரத்தினை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கம், மாணவர்களை வேளாண் கல்வி பயில அனைத்து வசதிகளும், அதாவது வகுப்பறைகள், ஆயுதக் கூடங்கள், பல்வேறுப்பட்ட பண்ணைகள, வானிலை ஆய்வுகூடம், பண்ணைக்கருவிகள், கால்நடைகள், விளையாட்டு திடல், விடுதி மற்றும்

உணவகங்கள், மேலும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கல்வி கற்பிக்க வேண்டும் என்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமியின் முன்னிலையில் பல்கலைக்கழகத்தின் சார்பாக, பதிவாளர் முனைவர் இரா. ரபீந்திரன் அவர்களும், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் சார்பாக அதன் செயலர் திரு. அ. ஆண்டி அவர்களும், கையொப்பமிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மாற்றிக் கொண்டார்கள் இத்தருணத்தில் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் இமயம் வேளாண்மைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் த. ஆறுமுகம் அவர்களும் உடனிருந்தார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்